# ஷங்ரி-லா திபெத்தியர்கள் (Tibetans, Shangri-La)




**Population:**
74,800 (2000)
92,100 (2010)
113,500 (2020)

**Countries:** China, Switzerland

**Buddhism:** Tibetan

**Christians:** 2,000

**மேலோட்டம்:**

**மற்ற பெயர்கள்:** Tibetan: Zhongdian, Zhongdian Tibetans, Chung-tien Tibetans, Chongtien, Rgyalathang

**மக்கள்தொகை:** 60,740 in China (1990, Asian Minorities Outreach); also in Switzerland

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய,ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, வட திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 7 (Rutog, Gartok, Zamda, Burang, Coqen, Gerze, Xigaze)

**திபெத்திய புத்தமதம்:**95%

**கிறிஸ்துவம்:** 2.6%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி.1862,புதியஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** Zang:Xiaozhongdian; Zang:Weixi; Zang: Deqing

**கி. அலைபரப்புகள்:**இல்லை

ROPAL **குறியீடு :** இல்லை

**கிறிஸ்துவத்தின் நிலை**




சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம்:** வித்தியாசமான மொழிகளைப் பேசும் சுமார் 75,000 திபெத்தியர்கள் யுன்னான் மாநிலத்தின் வடமேற்கில் உள்ள ஷங்ரி-லா (முன்பு சொங்தியன் (Zhongdian)) , வெய்ஷி (Weixi) மற்றும் லிசியாங் (Lijiang) மாவட்டங்களின் கிராமங்களில் வசிக்கின்றார்கள். கி.பி. 1990 ன் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 50,302 பேர் ஷங்ரி-லா மாவட்டத்திலும் 8,581 பேர் வெய்ஷி மாவட்டத்திலும் 1,849 பேர் லிசியாங் மாவட்டத்திலும் வாழ்கின்றார்கள். இவர்கள் வாழும் பகுதி வடக்கில் ஷங்ரி-லா மற்றும் தேஷின் (Deqen) பட்டணங்களுக்கு இடையிலுள்ள ஹங்துஅன் கணவாய் (Hengduan Pass) வரை விரிந்துள்ளது. இந்தக் கணவாயைக் கடந்தபின் மொழி வழக்கு குறிப்பிடத்தக்க முறையில் மாறுகிறது. ஹங்துஅன் என்பதின் பொருள் “செங்குத்தாகத் துண்டி” என்பதாகும். சில ஷங்ரி-லா திபெத்திய குடும்பங்கள் சுவிட்சர்லாந்துக்குக் குடிபெயர்ந்துள்ளார்கள்.

**அடையாளம்:** ஆப்ரேஷன் சீனா (Operation China) புத்தகத்தில் இந்த இனம் சொங்தியன் என்ற பெயரில் விவரிக்கப்பட்டுள்ளது. கி.பி.1933 ல் ஜேம்ஸ் ஹில்டனின் (James Hilton) லாஸ்ட் ஹரைசன்ஸ் (Lost Horizons) நாவலில் முதன்முறையாகக் குறிப்பிடப்பட்ட புதிரான ஷங்ரி-லா என்னும் பெயரைக்கொண்டு, வருமானம் ஈட்டும் நோக்கத்தோடு, அண்மையில் இந்த இனம் வாழும் மாவட்டம் மற்றும் பட்டணத்தின் பெயர் அதிகாரப்பூர்வமாக ஷங்ரி-லா என மாற்றப்பட்டது.

**மொழி:** ஷங்ரி-லா மற்றும் தேஷின் மொழி வழக்குகளில் உள்ள வித்தியாசம் ஒருவர் மொழியை மற்றொருவர் புரிந்துகொள்வதைக் கடினமாக்குகிறது என வட யுன்னான் மாநிலத்தின் திபெத்திய பகுதிகளுக்குள் பயணம் செய்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

**வரலாறு:** ஷங்ரி-லா திபெத்தியர்கள், ஷியாங் மக்களைச் சேர்ந்தவர்களென்றும், இவர்கள் இங்கு வந்து இப்பகுதிகளை வென்று முடிவாகத் திபெத்திய கலாச்சாரத்தோடு கலந்துவிட்டதாக உள்ளூர் கதைகள் கூறுகின்றன. மொழி, உடை மற்றும் கலாச்சாரத்தில் மற்ற திபெத்தியர்களிடத்திலிருந்து இவர்களுக்குள்ள வித்தியாசத்தை விளக்க இதுவே போதுமானது.

**பழக்கவழக்கங்கள்:** ஷங்ரி-லா திபெத்தியர்கள் மற்ற திபெத்தியர்களைக் காட்டிலும் வித்தியாசமான பாரம்பரிய உடையை அணிகின்றார்கள். பெண்கள் சால்வையால் சுற்றப்பட்ட, கூர் உருளை வடிவமான, ஒரு தலைப்பாகையை அணிவதை விரும்புகின்றார்கள்.

**மதம்:** பெரும்பாலான ஷங்ரி-லா திபெத்தியர்கள் திபெத்திய புத்த மதத்தைப் பின்பற்றுகின்றார்கள். நூற்றுக்கணக்கான துறவிகளைக் கொண்டுள்ள பெரிய சியதங் சொங்லின் (Jietang Songlin) புத்த மடம், ஷங்ரி-லா பட்டணத்திற்கு அருகில், வடக்கில் உள்ளது.




**கிறிஸ்துவம்:** அநேக கிறிஸ்தவர்கள், திபெத்தியர்கள் சுவிசேஷத்தால் முழுவதும் தொடப்படாதவர்கள் என நினைத்தாலும் சீனப் பகுதிகளில் வாழும் ஷங்ரி-லாக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் உண்டு. ‘வரலாறு கி.பி.1852 ல் தொடங்கியது, பேற் ரெனு (Pére Renou) என்கிற துணிச்சலான மிஷனெரி யுன்னான் மாநிலத்திற்கு வந்து சேர்ந்து அதன் வடமேற்கு முனையை நோக்கி முன்னேறினார். சொங்தியனிலிருந்து தேஷின் செல்லும் பாதையின் மூன்றில் இரண்டு பங்கைக் கடந்து, கம்பா புத்த மடமாகிய தொங்சுலின் (Dongzhulin) மடத்தை வந்தடைந்தார். இளம் பாதிரியார் சீன வியாபாரிபோல வேடமணிந்து தலைமை லாமாவை நண்பராக்கிக் கொண்டார். பேற் ரெனு மற்றும் அவரைச் சேர்ந்தவர்களால் அநேக திபெத்திய கிராமங்களில் சபையை ஸ்தாபிக்க முடிந்தது. இன்றும் பிரெஞ்சு முறையில் கட்டப்பட்ட ஒரு பெரிய பிரதான கத்தோலிக்கத் தேவாலயம் வெய்ஷிக்கு அருகில் சரோன்தயுவில் (Tchronteu) உள்ளது. ‘செயின்ட் பெர்னார்ட் (Saint Bernard) பிரிவைச் சேர்ந்த கத்தோலிக்கத் துறவிகளின் முக்கியப் பணி, வியாபாரத்திற்காக உயரமான மலைப்பாதைகளைக் கடந்து செல்லும் வழிப்போக்கர்களுக்கு உதவுவதாகும். இந்தத் துறவிகள், க்ளுனி சிஸ்டர்ஸ் ஆப் செயின்ட் ஜோசப் (Cluny Sisters of Staint Joseph) பிரிவைச் சேர்ந்த கன்னியாஸ்திரீகள் மற்றும் இரு திபெத்திய கன்னியாஸ்திரீகளின் உதவியோடு ஒரு மிஷன் பள்ளியை நடத்தினார்கள், இதில் சிக்கிம், நேபாள், பூட்டான் மற்றும் திபெத்திய குழந்தைகள் படித்தனர்.’ இந்நாட்களில் இங்குள்ள ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் 7,500 தெற்கத்திய கம்பா மற்றும் 2,000 ஷங்ரி-லா விசுவாசிகளுக்குப் பொறுப்பாளராய் இருந்துவருகிறார்.